அறம் வளர்க
மறம் மடிக

# சோஷலிசப் புரட்சி?

அதன் தத்துவம்

வ. சச்சிதானந்தம்.

=/25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"புதிய சகாப்தமொன்றை உருவாக்கும் பெரிய கிளர்ச்சி உண்டாகும். அக்கிளர்ச்சியானது ருஷ்யாவிலிருந்தோ, சீனவிலிருந்தோ அல்லது இவ்விரண்டு தேசங்களிலுமிருந்தோ வரும் சூத்திரராகிய பாட்டாளிகளின் காலம் தோன்றும். வைசியராகிய வர்த்தக வர்க்கத்தினரின் காலம் ஒழியும்."

1895
இலண்டன்.

— சுவாமி விவேகானந்தர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோஷலிசப் புரட்சி

# மக்களை ஏமாற்றுதல் பகிடியல்ல

உணவுற்பத்தி இன்றைய சுலோகமாயிருக்கின்றது. தன்னிறைவு எமது குறைபாடுகள் யாவுக்கும் சஞ்சீவி எனப் பிரசாரம் செய்யப் படுகிறது. இது உண்மையாயின் இன்று பர்மா தேசம் சொர்க்க லோகமாக வந்திருக்க வேண்டும். ஏனெனில் உணவு விஷயத்தில் பர்மா எப்போழுதும் தன்னிறைவு பெற்றிருந்ததுடன் வெளிநாடு களுக்கும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்திருக்கிறது ஆயினும் தென்கிழக்காசியாவில் பர்மாவே மிகுந்த வறுமைப்பட்ட தேசமாக இருக்கிறது.

இன்றைய உலகில் கோடிஸ்வரர்களின் நாடாகிய அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு உணவு உடை பாவனைப்பொருள் மட்டுமன்றி யுத்த தளவாடங்களும் பெருந்தொகை பணமும்கூட அனுப்பி வரு கிறது. இது ஒருபுறம்நடக்க மறுபுறத்தில் வேலையில்லாத் திண்டாட் டம், வறுமை, பயங்கரக் கொள்ளை முதலியன தலைவிரித்தாடு கிறது. அங்கே உணவு உடை, இருக்க வீடு இன்றித் தவிப்பவர் கோ டானுகோடி.

ஆங்கிலப் பேரறிஞர் தோமஸ் கார்லைல் பெரியதோர் உண்மை யைப் பின் வருமாறு விளக்கினர்.

> "கோடிக் கணக்கான சட்டைகளை உற்பத்தி செய்து குவித்திருக்கிறீர்களே. இச் சட்டைகளால் என்ன பயன்? கோடிக்கணக்கான உழைப்பாளிகள் இவற்றை வாங்கி அணிய இயலாதவர்களாய் வெற்றுடம்போடு திரிகிறார் கள்."

செல்வச் செழிப்பின் மத்தியில் வறுமை தாண்டவமாடுவது தான் முதலாளித்துவத்தின் இலக்கணம். உணவு விஷயத்தில் தன் னிறைவு பெற்றுக் கைத்தொழில்களை விருத்தி செய்த காலத்தும் பொது மக்களின் வறுமையைப் போக்க முடியாது. எனினும் யு.என் பி. தமிழரசினர், தமிழ்க்காங்கிரஸ் வாதிகள் யாவரும் ஒன்று சேர்ந்து உணவுத்தன்னிறைவினல் மட்டுமே இலங்கைக்குப் பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தில் பொற்காலம் உருவாகும் என்று மக்களுக்கு ஓட்டங் காட்டுகிருர்கள். உணவுற்பத்தி அமோகமான வெற்றியீட்டியது என்பதே எங்கும் பிரசாரம். ஆனுல் அரிசி என்றுமில்லாதபடி உச்ச விலையடைந்திருக்கிறது. மற்றும் உணவுப் பொருள்களின் விலையும் அதே மாதிரி அதிகரித்திருக்கிறது. தன்னிறைவு மக்களின் வறுமையை நீக்கும் என்பது ஒரு மெருகிடாத பொய். உணவுற்பத்தி இலங்கையில் வெற்றியீட்டியுள்ளதென்பது ஓர் ஏமாற்று.

இதனை நேருவின் பொன்மொழிகள் நன்கு வலியுறுத்துகின்றன. 'இந்தியா செல்லும் மார்க்கம் யாது?' என்னும் நூலில் அவர் கூறுவதாவது;

'என்றும் இல்லாதபடி இன்று இவ்வுலகம் செல்வம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. எதிர்காலமும் நாம் வர்ணிக்க முடியாத முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் இருக்கின்றன. எனினும் முதலாளித்துவ முறை தகர்கிறது. கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் தவிக்கும் போது பெருந்தொகையான உணவுகளும் மற்றும் பொருள்களும் அளிக்கப்படுகின்றன. பயிர்களை அளிப்பதற்கு பயிர் அழிக்கும் ஜெந்துக்கள் வயல்களில் கொண்டு வந்து விடப்படுகின்றன. பயிர் விளைந்தாலும் அறுவடை செய்யாது விடுவார்கள். கோதுமை, பருத்தி, தேயிலை கோப்பி முதலிய பொருள்களின் உற்பத்தியைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு பெரிய தேசங்கள் ஒன்றுகூடி ஆலோசிக்கும். மனிதன் தனது வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளைப்பூர்த்திசெய்வதற்கு இயற்யுடன் போராடி வந்திருக்கின்ருன்.

'வறுமையை அடியோடு ஒழிக்கக்கூடிய அளவுக்கு இயற்கை தன்செல்வத்தை அவன் முன்னே குவிக்கையில் அவன் என்ன செய்கின்ருன்? அவன் இவற்றை அழித்து எரித்து அச் செயலால் மேலும் மேலும் வறுமையுற்றுத் தவிக்கிருன்.

'சரித்திரத்திலேயே இதைவிட ஆச்சரியப்படக்கூடிய முரண்பாடு இருந்ததில்லை. முதலாளித்துவ முறை முன் எவ்வளவு பயன்பட்டிருந்தாலும் தற்போதைய உற்பத்தி முறைகளுக்கு ஏற்றதல்லவென்பது வெளிப்படை........ பழைய முறைகளில் ஆதாயம் பெற்று வாழ்கிறவர்கள் சோஷலிச முறைக்கு மாற்றுவதை எதிர்க்கவே செய்வார்கள். இப் பழைய முறைகள் தமது கண்முன் அழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதைக் கண்டிருந்தும் நாட்டின் பெருந்தொகையான செல்வத்தைச் சகலருடனும் பகிர்ந்து கொள்வதை விரும்பாது தமக்கிருக்கும் சிறு சலுகைகளை இறுகப் பிடித்துக் கொள்ளுகின்றனர். போரும் புரட்சியும் உலக மாற்றங்களுமான சம்மட்டிகள் அவர்களுடைய உரங்கொண்ட தலையில் ஒரு சிறு நெளிவையாவது உண்டுபண்ணிக் கொள்ள முடியவில்லை. ஏனையோர் · வகுப்புவாதம் அல்லது தேசீயம் என்னும் போர்வைக்குள் தமது பிற்போக்குக் கொள்கைகளை மறைக்கின்றனர்".

இலங்கையில் தமிழரசும் தமிழ்க் காங்கிரசும் தம் பிற்போக்குக் கொள்கைகளை வகுப்புவாத போர்வைக்குள்ளும் யு.என்.பி. தனது முதலாளித்துவ கொள்கைகளை தேசீயப் போர்வைக்குள்ளும் மறைப்பதைக் காண்கிறோம். இவர்கள் எத்தகைய பிரயத்தனங்கள் செய்த போதிலும் தங்கள் முன்னே முதலாளித்துவம் ஒழிந்து போவதைக் கண்டு அவலநிலையடைகிறார்கள். பாராளுமன்றத்தை ரத்துச்செய்து சர்வாதிகார ஆட்சியைப் புகுத்துவது உட்பட எதனையும் அவர்கள் செய்யத் தயங்கமாட்டார்களென எச்சரிக்கின்றேன். இத்தகைய சர்வாதிகாரம் நிறுவப்படும் இடத்து அதனை செல்வநாயகம், பொன்னம்பலம், K. M. P. இரர்ஜரட்ன, R. G. சேனநாயக்கா, பிலிப்குணவர்த்தன ஆகியோர் ஆதரிப்பர் என்பதற்கு ஐயமில்லை.

ஏனைய நாடுகளில் சனநாயக முறையை ஆதரித்துக் கூச்சலிட்டவர்களே முதலாளித்துவத்துக்கு இடையூறு ஏற்படுமிடத்து சர்வாதிகாரிகளாக மாறியிருக்கின்றனர். இது இத்தாலி, ஜெர்மனி, போர்த்துக்கல், இஸ்பெயின் பிரேசில், ஆகிய தேசங்களிலும் இலங்கைக்குச் சமீபத்திலுள்ள பர்மா, பாக்கிஸ்தான், இந்துனேசியா என்னும் தேசங்களிலும் நேர்ந்துள்ளது. இந்தியாவிலும், இந்திராகாந்தி உண்மையான சோஷலிச ஆட்சி முறையை நிலைநாட்ட எத்தனிக்கும் காலத்து அங்குள்ள நிஜலிங்கப்பாக்களும் மொரார்ஜி தேசாய்களும் பாராளுமன்ற ஆட்சி முறையை ஒழிக்கத் தயங்கமாட்டார்கள்.

பொதுமக்கள் வேண்டிப் போராடுகிற சோஷலிச ஆட்சிமுறை யாது? பாடுபடும் பாட்டாளிகளுக்கே இந்தப்பார் சொந்தம் ஆனால் முதலாளித்துவ முறையாதெனில்ஐந்து விகிதத்தினரின் நல்வாழ்வுக்காக தொண்ணூற்றைந்து விகிதத்தினர் அயராது உழைக்கின்றனர் அவ்வாட்சி முறையிலும் உற்பத்தி சாதனங்கள் எவருடைய ஆதிக்கத்துக்குள் இருக்கின்றனவோ அவரே நாட்டை ஆள்பவராவர் உற்பத்திச் சாதனங்கள் ஒரு சிலர் வசம் இருப்பின் சனநாயக முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கீழும் ஆட்சி அந்த ஒரு சிலர் வசமேயிருக்கும். உற்பத்தி சாதனங்கள் மக்கள் யாவருக்கும் சொந்தமாயிருந்தால், சர்வாதிகார முறை நிலவுமிடத்தும் ஆட்சி மக்கள் யாவரின் ஆட்சியாயிருக்கும். இதைக் கருத்தில் கொண்டே இந்திய தேசியக் காங்கிரசின் தலைவர் ஜகஜீவன்ராம் இந்திய மக்களுக்கு 1970ல் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''சோஷலிஸம் தவிர்ந்த சனநாயகம் தனவந்தருக்காக தனவந்தரால் நடத்தப்படும் தனவந்தரின் ஆட்சி.''

ஜவகரலால் நேருவும் 1936ம் ஆண்டில் லக்னெளவில் நடைபெற்ற ஆண்டு விழாவில் தலைமைப் பேருரையில் கூறியதாவது.

''உலகின் பிரசனைகளையும், இந்தியாவின் பிரச்சனைகளையும் தீர்வு காணும் ஒரேவழி சோஷலிசமே யென்பது எனது திடமான நம்பிக்கை சோஷலிசம் என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடுமட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கைத் தத்துவமாகவும் அமைந்துள்ளது. ஆகவேதான் அது என் மனத்தை கவருகிறது சோஷலிச முறையாலன்றி இந்திய மக்களின் வறுமை, தொழிலின்மை, இழிநிலை அடிமைத்தனம் என்பவற்றை ஒழித்தற்கு வேறு வழி எதுவுமில்லை இது நிறைவேறுவதாயின் சொந்தப் பாவிப்புக்குரிய சொத்துத் தவிர தனிச்சொத்துடைமை முற்றிலும் ஒழிக்கப்படல் வேண்டும் இப்போதைய ஆதாய முறைக்குப் பதிலாக ஒன்றித்துச் சேவைபுரியும் உயர்ந்த இலட்சியத்தை நிலை நாட்டுதல் வேண்டும். இது கைகூடினுல் எமது இயல்புகளும் நாட்டங்களும் பழக்கங்களும் மாற்றமடையும் சுருங்கக் கூறின் தற்போதய முதலாளித்துவ அமைப்பிலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு புதிய நாகரிகத்தை இது உருவாக்கும் சோவியத் ருஷ்யாவும் அதன் சாதனைகளுமே எதிர்காலத்தை ஒளியுடைய தாக்குகிறது. உலகத்திற்குப் பேராபத்து ஏற்பட்டால் ஒழிய இப்புதிய நாகரீகம் ஏனைய நாடுகளுக்கும் பரவி முதலாளித்துவம் வளர்க்கும் யுத்தங்களையும் முரண்பாடுகளையும் ஒழித்துவிடும். ஆகவே சோஷலிசம் என்பது நான் விரும்பும் பொருளாதாரக் கோட்பாடு மட்டுமன்றி நான் மனதார ஆதரிக்கும் முக்கியமான கொள்கையாகும்.''

எந்தப் பொருளாதார நிபுணனும் அவன் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவனுயிருந்தாலும் சரி சோஷலிச வாதியாயிருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி முதலாளித்துவ அமைப்பு நிலைக்கு மென்று கூறமாட்டான். எவற்றுக்கு ஆதியுண்டோ அவற்றுக்கு அந்தமும் உண்டென்று இந்து தத்துவ ஞானமுங் கூறுவது, ஆகவே விஞ்ஞான அறிவின் படியும் தத்துவ ஞானத்தின் படியும் முதலாளித்துவ முறை அழிவதைத் தவிர்க்க முடியாது. மனிதன் எவ்வண்ணம் எப்பொழுது இறப்பான் என்பதைக் கூறமுடியாதோ அதேபோல் முதாளித்துவ முறையும் எவ்வண்ணம் எப்பொழுது அழியும் என்று கூறமுடியாது எவ்வளவு காலம் முதலாளித்துவ முறை நீடிக்கிறதோ அவ்வளவு காலம் மக்களின் துன்பமும் நீடிக்கும்.

இப்பேற்பட்ட பெருந்துன்பத்துக்குக் காலான முதாளித்துவ முறையை மக்கள் உடனடியாக முறியடிக்காமல் விடுவதேன் என்னுமொரு கேள்வி எழுகிறது. இதற்குப் பதில் போற்றித் திருவகவலில் மாணிக்கவாசகப் பெருமான் கூறுவதில் புலனுகிறது.

"தெய்வமென்பதோர் சித்த முண்டாகி
முனிவிலாததோர் பொருளது கருதலும்
ஆறுகோடி மாயாசத்திகள்
வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின."

முதலாளித்துவ அரசியலில் உள்ள மாயாசக்திகள் எவை? சுதந்தரம் பறிபோகிறதென்ற கூச்சல் தமிழுக்காபத்தென்ற கூச்சல்; சிங்களத்துக்காபத்தென்ற கூச்சல்; சமயத்துக்காபத்தென்ற கூச்சல்; இவைபோன்ற வேறு பல கூச்சல்கள் மற்றும் வகைகளில் நேர்மையும் கண்ணியமு முடையவர்கள் தமது முதலாளி வர்க்க நலன்கள் பாதிக்கப்பட நேர்ந்தால் மிகவும் நேர்மையற்றவர்களாக மாறி விடுவார்கள். இதற்குச் சிறந்த உதாரணம் டட்லி சேனநாயக்கா 1965ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின் போது கூட்டரசாங்கம் வந்தால் புத்தசமயமும் சிங்களமொழியும் அழிந்து விடுமென்ற கூச்சல் அந்த மாயா சக்திகளில் ஒன்று. பண்டாரநாயக்கா அரசாங்கம் வெளிநாட்டுப் பிரயாணங்களிலும் பென்ஸ் கார்களிலும் அமைச்சருக்கு சொகுசு மாளிகையமைப்பதிலும் தொகையான பணம் விரயமாக்கிறதென்னும் கூச்சல், மற்றுமொரு மாயா சக்தி. இவையெல்லாம் சனநாயகத்தை அவர் எவ்வண்ணம் உதாசீனம் செய்கிருர் என்பதை நிரூபிக்கும். கூட்டரசாங்கம் திரும்பி வந்தால் இலங்கையைச் சீனுவிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்று போட்ட கூச்சல் எவ்வாறு உண்மையை ஏளனம் செய்கிருரென்பதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டட்லி சேனநாயக்கா பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அம்பேபுஸ்ஸ வாடிவீட்டில் சீனர் ஒருவர் தன்னைக் குறிப்பாகப் பார்த்தார் என்றும், படம் பிடிப்புக் கருவியுடன் தன்னைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ருரென்றும் கூறினர். சீனர் இலங்கையைக்கைப்பற்ற இருக்கிருர்கள் என்ற தன் கூச்சலுக்கு ஆதாரமாக இதனைக் கூறினர். இதுநடந்த ஒரு வாரத்திற்குப்பின், பொலன்னறுவா வாடிவீட்டில் டட்லியையும் C. P. de. சில்வாவையும் பல அமெரிக்கர் குறிப்பாக உற்று நோக்குவதை இதன் ஆக்கியோன் நேரில் கண்டதுண்டு. இதே அமெரிக்கர் படம் பிடிப்புக் கருவிகளுடன் இவ்விருவரையும் கூட்டம் நடைபெற்ற இடத்திற்குத் தொடர்ந்து சென்றனர்.

டட்லி சேனநாயக்காவின் நிதானத்துக்கு வேறு சான்றுகள் வேண்டுமானுல் இன்னுமுண்டு பேராதனையில் இராணுவத்தினர் சகல கட்டுப்பாடுகளையும் மீறி அட்டகாசம் செய்த பொழுது அவர்களைத் தகுந்தவாறு கண்டிப்பதற்குப் பதிலாக பல்கலைக்கழக மாணவிகள் தகாத செயலொன்றைச் செய்தனர் என்றும் சற்றும் கூச்சமின்றிப் பாராளுமன்றத்தில் விளக்கங் கூறினர். அதேபோல சமீபத்தில் வல்வெட்டித்துறையிலும், மன்னுரிலும் இராணுவத்தினர் வேறெந்த சனநாயக நாட்டிலும் காணமுடியாத அக்கிரமங்களைப் பொதுமக்களுக்குச் செய்ததோடு பா. உ. ஒருவரையும் கேவலமான முறையில் தாக்கிய பொழுது டட்லி சேனநாயக்கா கொடுத்த விளக்கம் தமிழ் மக்களுடைய இரத்தத்தைக் கொதிக்கச் செய்தது.

1965ம் ஆண்டுத் தேர்தல் பிரசாரத்தில் பல வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்தார், ஆனுல் அவற்றை அளிக்கும் பொழுதே அவற்றில் ஒன்ருவது நிறைவேற்றுவது சாத்தியப்படாது என்பதை முன்னரே அறிந்திருந்தால் உதாரணமாக தமதாட்சி நிறுவப்படுமானுல் அப்பிள் பழங்களும், திராட்சைப் பழங்களும் தருவித்துக் கொடுப்பேன் என்று கூறினர். இத்தகைய பழங்களுக்கோ மற்றும் பாவனைப் பொருட்களுக்கோ அந்நிய செலாவாணி கிடைக்கப் போவதில்லை யென்பது நன்கு அறிந்திருந்தும் இப்படிக் கூறினர்.

தமிழரசுக்கட்சியின் ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்களித்தார். இதை நம்பித் தமிழரசுக்கட்சி தனது ஆதரவை அவருக்களித்தது ஆனுல் அவ்வாக்குறுதிகள் காற்றில் பறந்தன அவ்வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எதிர்கட்சியினர் முட்டுக்கட்டையாயிருந்தனர் என்று சாக்குப் போக்குக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வர்க்க நலனைக் காப்பதற்கு இவர்கள் பிரயோகிக்கும் மாயா சக்திகள் இவையே. இதே போன்ற மாயா சக்திகளையே தமிழரசும், தமிழ்க்காங்கிரசும் கடந்த 40 ஆண்டுகளாகப் பிரயோகித்தது தமிழ்மக்கள் அறிவர்.

தமிழரசாரும், தமிழ்க்காங்கிரசாரும் தலைமை 'பதவிக்காக மோதிக்கொள்கிருர்கள் ஆனல் அடிப்படைக் கொள்கைகள் இருசாராருக்கும் ஒன்றே; உதாரணமாக கடந்த 10 ஆண்டுகளாக நிறைவேறிய சட்டங்கள் 257 அத்தனைக்கும் யு. என். பியுடன் சேர்ந்து வாக்களித்துள்ளார்கள். பொதுமக்களின் முன்னேற்றத்துக்குச் சாதகமான சட்டங்கள் யாவுக்கும் மாருக வாக்களித்துள்ளார்கள். இது கால வரையில் அவர்களுடைய சேவையானது சிங்களவரின் ஆத்திரத்தை கிளப்பிவிடும் வகையில் பாராளுமன்றத்தில் இருந்திருந்துவிட்டு சில சொற்பொழிவுகளை ஆற்றுவதோடு நின்றுவிட்டது. ஆனல் இது தமிழரின் நிலையை மிகவும் பாதித்துவிட்டது. இப்படியே தமிழ் வகுப்புவாதக் கட்சிகள் தமிழரை ஒரு புறம் ஏமாற்ற யு. என். பி. சிங்கள மக்களை மறுபுறம் ஏமாற்ற மரணத்தறுவாயிலிருக்கும் முதலாளித்துவம் புத்துயிர் பெறுகிறது.

சமூக சேவா நிலையங்களும் வைத்தியசாலைகளும் மற்றும் ஸ்தாபனங்களும் முதாளித்துவ அமைப்பை நீடித்திருக்கச் சேவை புரிகின்றனவேயொழிய மக்கள் நலனை மட்டுங்கருதியமைந்தனவல்ல.

தொழிலாளருக்கும் மத்திய வகுப்பினருக்கும் கிடைக்கும் ஊதியம் அவர்களை உயிருடன் வைத்து வேலை வாங்குவதற்கும் அவர்களுக்குப் பின் அவர்களுடைய இடத்தையெடுப்பதற்கு ஒரு சந்ததியை உருவாக்குவதற்கும் மட்டுமே போதியதாயுள்ளது. இன்றைய உலகில் விஞ்ஞானவளர்ச்சியின் காரணமாக ஏராளமான வருமானம் கிடைக்க வழிகள் திறந்திருந்த போதிலும் இவ்வருமானம் யாவும் முதாளிகளுக்குக் கிடைக்கையில் தொழிலாளருக்குக் கிடைப்பது இந்தச் சிறு ஊதியம் மட்டுமே தொழிலாளர்கள் தங்கள் சங்கங்கள் மூலம் பெரும் போராட்டங்கள் நடத்தி இந்த ஊதியத்தை ஒரு சிறிது கூட்டினுல், அதை முன்னிருந்ததிலும் குறைப்பதற்கு முதலாளித்துவம் நடவடிக்கை எடுத்துவிடும். உதாரணமாகக் கடந்த 5 வருடங்களுக்குள் இலங்கையில் இரண்டு படியரிசியை ஒரு படியாகக் குறைத்த காரணத்தால் முன் 2 படிக்கு 50 சதம் கொடுத்த மக்கள் இப்போ 1 படிக்கு 1-50 ரூபா கொடுக்கிருர்கள் இதன் காரணமாக ஏனைய பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இரட்டிப் பங்கு விலை ஏறிவிட்டன இது மக்களின் வேதனத்தைக் குறைப்பதற்கு ஒரு வழி.

ரூபாயின் பெறுமதியை 80 சதமாக்கியவுடன் ரூபா 100 சம்பளம் எடுத்தவன் ரூபா 80 சம்பளம் எடுத்தவனுகிருன். இது அவனது சம்பளத்தைக் குறைப்பதற்கு இன்னுமொரு வழி (FEECS) என்ற முறையில் வெளிநாட்டுக்குப் பொருள் வரவழைக்க அனுப்பும் பணத்திற்கு 100க்கு 55 வீதத்தில் வரி விதிக்கப்படுகிறது. இதன் காரணமாக சாதரணப் பொருள்களுக்கு பள்ளிக்கூடப் புத்தகங்கள் உட்பட விலை அதிகரித்திருக்கிறது இது வேதனத்தைக் குறைப்பதற்கு இன்னுமோர் வழி. இது இவ்வாறிருக்க முதாளிகளும், வியாபாரிகளும் பொருள் உற்பத்தி செய்தோரும் கடந்த 5 வருடங்களாகப் பெருந்தொகையில் இலாபம் ஈட்டியிருக்கிருர்கள். நூற்றுக்கு 300க்கு மேல் இலாபம் ஈட்டியவர்களும் பலர். இவ்விலாபம் முழுவதும் மக்களிடமிருந்து வஞ்சிக்கப்பட்டதே.

பொதுத்தேர்தல் காலங்களில் தாங்கள் இப்படிப்பெற்ற இலாபத்தில் ஒரு பகுதியை யு. என்பிக்கும் தமிழரசுக்கும் தமிழ்க்காங்கிரசுக்கும் கொடுத்து இக்கட்சிகள் திரும்பி வருவதற்கு வழி வகுப்பார்கள் முதலாளித்துவக் கட்சிகளிலே தேர்தலுக்கு நிற்கிறவர்களே பணம் படைத்தவர்கள். அத்துடன் அவர்களுக்கு ஆயிரக் கணக்காக முதலாளிகளிடமிருந்து பண உதவி கிடைக்கும் தொழிலாளர் கட்சி அபேட்சகர்கள் ஏழைகள் அவர்களுக்கு இம் முதலாளி வர்க்கத்தினர் ஒரு சிறு உதவியும் செய்யப் போவதில்லை• தொழிலாளி வர்க்கத்தினருக்குச் செய்ய இயல்புமில்லை ஆகவே எந்த நாட்டிலும் இப்போராட்டம் ஒரு சம பலமுள்ளவரிடையே நடக்கும் போராட்டமல்ல இதை மக்கள் நன்ருக மனத்திற் கொண்டு விழிப்புடன் இருக்கவேண்டும். இன்றைய தலைவர்களின் வாய்வீச்சிலே எடுபடாது அவர்களுடைய செயல், நடிவடிக்கைகளிலிருந்து அவர்களை இனம் பிரித்துக் கண்டு தனிப்படுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்ளவேண்டும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முன்னேறுகிறார்கள்

''மனித குலத்தின் விதியை உருவாக்கும் வார்ப்புக்களம் அமெரிக்கவே.''

ரோமாபுரியின் வீழ்ச்சிக்கு மூன்றே ஆண்டுகள் இருக்கும்பொழுது அந்நகரத்துப்புலவர் ஒருவர், ''ரோம் என்றுமழியாது'' என்று கவி பாடினார். இன்று அமெரிக்காவிலுள்ள தனவந்தரிடையே இதேவித மான நம்பிக்கை நிலவுவதைக் காணலாம். 1969-ம் ஆண்டு நவம் பர் மாதம் வியட்நாம் யுத்தத்தை எதிர்த்து நியுயோர்க் நகரில் செய்யப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டமானது மிகப்பெரிய புரட்சி யொன்று அமெரிக்காவை விழுங்க இருக்கிறதென்பதை தெளிவாக உணர்த்துகிறது. ''ஆங்கிலம் பேசும் மக்களின் சரித்திரம்'' என்ற நூலில் பின்வருமாறு வின்ஸ்ரன் சேர்ச்சில் கூறுகிறார்.

''ஐக்கிய அமெரிக்காவின் உடலை மாத்திரமன்றி அதன் ஆவி யையும் மிகவும் பாதிக்கக்கூடிய பெரும் அதிர்ச்சியொன்று நெருங்கி வருகிறதென்று சிலவாண்டுகளாக சிந்தனையாள ரும் யாத்திரீகரும் அவதானித்திருக்கின்றனர்''

ஐக்கிய அமெரிக்காவே உலகத்தில் மிகப்பெருந்தொகைத் தொழி லாளரையும் மிகுந்த கைத்தொழில்களையுமுடைய நாடாக விளங்குகி றது. எந்த முதலாளித்தத்துவ நாடும் தான்உற்பத்தி செய்யும்பொருள் கள்யாவையும் அதன் தொழிலாளருக்கே விற்க முடியாது பொருள் கள் வெளிநாடுகளுக்கே விற்கப்பட வேண்டும். தானுற்பத்தி செய் யும் பொருள்களை ,வெளியே விற்பதற்குச் சந்தை கிடைக்காமல் போனபொழுது அமெரிக்கர் வெளி நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்தனர். இதுவே நிதிமூலதனம் என்பது. இதிலும் அமெரிக்கா நிரம்பற்கட்டத்தை அடைந்துவிட்டது. நிலைமையைச் சமாளிப்பதற்கு மூன்றாவது முறையைக் கையாண்டனர். அதாவது அபிவிருத்தியடையும் நாடுகளிலே தொழிலில் பங்குபற்றுதல் இதில் யப்பானும் மற்றும் தேசங்களும் அமெரிக்கருடன் போட்டி போட் டனர். எனவே நான்காவது முறையைக் கையாள வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது. கொரியா, வியட்நாம் போன்ற தேசங் களில் போரில் ஈடுபடுவதே இந்நான்காம் முறை.

அமெரிக்காவில் போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதற்கெனவே நகர்கள் கிளம்பியுள்ளன. இப்பொழுது அமெரிக்கா வியட்நாமிலி ருந்து வெளியேறுவதனால் ஆபத்து ஒன்று எதிர்நோக்குகிறது. இலட்சக்கணக்கான தொழிலாளர் தொழிலிழந்து தவிக்க நேரிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் கொம்பியூட்டர் கருவி தன்னியக்கக்கருவி என்பவற்றின் ஒருமித்த விளைவு இவ்வாபத்தை அதிகரித்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன் 4000 ஆட்கள் செய்த வேலையை இன்று இக்கருவிகளைக்கொண்டு 10 ஆட்கள் செய்ய முடியும். டொலர் ஆபத்து எனப்படுவது இப்பெருமதிர்ச்சியின் ஓர் அறிகுறியாகும். அமெரிக்காவின் முதலாளித்துவம் ஒழிவது திண்ணம். எப்பொழுது எவ்வண்ணம் அது நிகழும் என்பதை ஒருவரும் முன்னதாகக் கூறமுடியாது.

ஆனல் நம்மில் அனேகர் நினைப்பதிலும் பார்க்க அது முன்னதாக நடைபெறும்.

முதலாளித்துவத்தின் அரணுகிய அமெரிக்கா தகர்ந்ததும் சிறிய முதலாளித்துவ நாடுகள் விரும்பினும் விரும்பாவிடினும் உலக சோஷலிச முறைக்குள் அவை ஈர்க்கப்படும். அமெரிக்காவில் முதலாளித்துவத்தை நீடிக்கச் செய்வதற்கு ஒரே ஒருவழி மூன்றும் உலக யுத்தத்தை ஆரம்பிப்பதாம். முன்னேறியுள்ள நாடுகள் யாவற்றிலும் அணு ஆயுதங்கள் குவிந்திருப்பதுதான் இதைத்தடுப்பதற்கு ஒரேவழி. சோவியத் ரூஷ்யாவில் உள்ள சிறிய (பிக்கிளி) குண்டுகள் அமெரிக்கா முழுவதையும் 10 முறைக்குமேல் அழித்து மிஞ்சக்கூடியவை அணுஆயுதப்பிரயோகமின்றி யுத்தமொன்று நடந்தாலும், முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களில் நேர்ந்தவாறு முதலாளித்துவம் இன்னும் பல நாடுகளிலும் ஒழிய நேரிடும்.

மேற்கு ஜேர்மனி அமெரிக்காவிலிருந்து பிரிந்துவிட்டது. அங்கு சோஷலிசக்கட்சி அமோக வெற்றியடைந்து அக்கட்சித் தலைவர் அங்கு பிரதமராயிருக்கிருர். வெகுவிரைவில் மேற்கு ஜேர்மனியில் எதையும் எதிர்பார்க்க முடியும்.

ஜேர்மனிக்கருகாமையில் உள்ள ஆஸ்திரியாவில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் நடந்த தேர்தலில் சோஷலிசக்கட்சி முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது.

இந்தியாவிலும் மக்கள் சோஷலிசப்பாதையில் முன்னேறுகிருர்கள், ஆளும் கர்ங்கிரஸ்கட்சியில் பிளவேற்பட்டதோடு மக்கள் வர்க்க ரீதியில் கட்சி சேர்ந்து கொண்டார்கள். இப்போ வெளிக்கிளம்பியுள்ள சக்திகளை முதலாளித்துவ கட்டுக்கோப்புக்குள் கட்டுப்படுத்த முடியாது. இந்தியாவில் சோஷலிசப் புரட்சியொன்று உருவகியாவுடன் இலங்கை தனித்து நின்று முதலாளித்துவத்தை பாதுகாக்க முடியாது. அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி இந்தியா ஆகிய நாடுகளில் யாதாயினும் ஒன்றில் முதலாளித்துவம் அழியுமாஞல் அதுவே உலக முதலாளித்துவத்தின் அழிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒரு புறமிருக்க இலங்கை மக்கள் சோஷலிசப் பாதையில் எவ்வண்ணம் முன்னேறுகிறார்களோ அதேபோல் ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகளில் உள்ள மக்களும் அதே பாதையில் முன்னேறுகின்றனர். ஆகவே இலங்கையில் சோஷலிசப் புரட்சியானது வருவதைத் தவிர்க்க முடியாது. சோஷலிசப்புரட்சி இரண்டு அம்சங்களைக் கொண்டது. முதலாவது அரசியல் புரட்சி, இரண்டாவது பொருளாதாரப் புரட்சி, அரசியல் புரட்சியென்பது ஆளுங்கட்சி மாறுதல். 1956-ம் ஆண்டு பண்டாரநாயக்கா ஆட்சிபீடத்துக்கு வந்த பொழுது இத்தகைய மாற்றம் ஏற்பட்டதுண்டு. அப்புரட்சியுடன் அதிகாரமானது நடுத்தர வகுப்பினர் வசம் வந்துவிட்டது. அந்தச் சமயத்தில் பண்டாரநாயக்கா கூறியதாவது, "நதியானது முன் நோக்கிப் பாயுமேயன்றிப் பின்புறமாகப் பாயமாட்டாது" எந்தச் சக்தி முன்னேறும் பொழுதும், இரண்டடி முன்னேறினால் ஓரடி பின் வாங்குதல் இயல்பு. 1965-ம் ஆண்டு யு. என். பி. மீண்டும் அதிகாரத்துக்கு வந்தமை ஓரடி பின்வாங்கியதைக் குறிப்பதாகும். இப்பொழுது மக்கள் இரண்டடி பாயத் தயாராயுள்ளனர்.

ஆனால் கூட்டாட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் சோஷலிசம் வந்துவிடும் என்றதல்ல. அதுதான் முதலாவதுபடி. ஆனால் அந்த முதல் படியில் ஏறாமல் அடுத்த படியை அடையமுடியாது. இந்த முதல்படிக்கு மேலே பொருளாதாரப் புரட்சி அத்தியாவசியம். இப்புரட்சியாவது உற்பத்திசாதனம், வினியோகிப்புச்சாதனம், நாணயச்சாதனம் சமூகத்துக்குச் சொந்தமாவதே. இது சோஷலிச சமுதாயம் வளருதற்கு விதையாக அமையும். சோஷலிசத்தின் பயனை அடைதலானது நாம் தீவிரமாகப் பாடுபட்டு உற்பத்தியை பெருக்குதலையே பொறுத்ததாகும். சோஷலிச நாடுகளிலே கொம்பியூட்டர் சாதனமும் தன்னியக்க சாதனமும் மக்களின் சேவகர்களாக இருக்கின்றன, ஆனால் இவை முதலாளித்துவ நாடுகளில் மக்களின் விரோதிகளாகின்றன. ஆகவே எதிர்கால - சோஷலிச சமுதாயத்தில் பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும்.

மனமாற்றத்தினால் சோஷலிசத்தையடைய முடியுமென்று பலர் ஏமாற்றப் பட்டிருக்கின்றனர், இவ்வழியானது தோல்விக்கே இட்டுச் செல்வதாகும். உலகெங்கும் முற்காலம் தொடக்கம் சீர்திருத்தவாதிகள் இதைப்பின்பற்றித் தோல்வி கண்டிருக்கிறார்கள். ஜேர்மனியில் வெஸ்லிங்கும் இங்கிலாந்தில் றொபட் ஓவனும் இத்தகைய தோல்விக்குப் பெரும் உதாரணங்களாவர். ஓவன் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் ஒரு கோடீஸ்வரனாகவிருந்தார். அவர் குழந்தையுள்ளம் படைத்தவர், உயர்ந்த இலட்சியங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். மக்கள் சேவைக்கெனத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர். அன்றியும் மக்கள் தலைவர்களாக உதித்த சிலருள் ஒருவராவர். அவர் ஸ்கொத்லாந்தில் மக்கள் சோஷலிசக் குடியேற்றமொன்றை அமைத்தார். அங்கே மனிதனை மனிதன் சுரண்டுவது என்பதில்லை. இதில் வெற்றிகண்ட ஆர்வத்தினுல் அயரலாந்திலும் இதைப்போன்ற சோஷலிசக் குடியேற்றமொன்றை அமைத்தார். அங்கிருந்து அமெரிக்காவுக்குச்சென்று அங்கேயும் ஒரு சோஷலிசக் குடியேற்றத்தை அமைத்தற்கு தன் செல்வம் முழுவதையும் விரயஞ்செய்தார் உலகம் முழுவதும் மனமாற்றத்தின்மூலம் சோஷலிசத்தை நிறுவுவதே அவரது இலக்காக இருந்தது. இது சாத்தியப்படாமற் போகவே உற்பத்திசாதனங்கள் தனியாருக்குச் சொந்தமாயிருக்கும் வரை சோஷலிசத்தைக்கொண்டுவர இயலாதென்பதை உணர்ந்தார்.

தனிச்சொத்துரிமையை நீக்குதல் வேண்டுமென்று ஒவன் கூறியது அவர்வாழ்வில் ஒரு பெருந்திருப்பமாக அமைந்தது. அவர் சீர்திருத்த வாதியாகமட்டும் இருந்த காலத்து அவரைத்தேடிப் பாராட்டுதல்கள், பணம், பெருமை, புகழ் முதலியன வந்தடைந்தன. ஐரோப்பா முழுவதிமும் எவரிலும் பார்க்கக் கூடுதலாக விரும்பப்பட்டார். அவரைப் போன்றவர்கள் மட்டுமன்றி அரசர்களும் அமைச்சர்களும் அவருக்கு விருந்துபசாரம் அளித்து கௌரவித்தனர். ஆனுல் தனிச்சொத்துடமையை நீக்குதல் வேண்டுமென்று அவர் கூறியதும், யாவும் மாறின. றொபட்ஓவன் அதிகாரவர்க்கத்தினரால் ஒதுக்கப்பட்டார். பத்திரிகை உலகம் அவரது பெயரை இருட்டடிப்புச் செய்தது. தனிச்சொத்துரிமைக்கு மாறுக மகாத்மா காந்தியும் ஏதாவது கூறத்துணிந்திருந்தால் அம்மீகானுக்கும் இக்கதிதான் கிடைத்திருக்கும்.

பின்னர் றொபர்ட் ஓவன் தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து அவர்கள் மத்தியில் 30 ஆண்டுகளாகப் பணியாற்றினுர் இங்கிலாந்தின் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டுச்சம்மேளனத்தின் முதலாவது தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

எனவே எதிர்காலம் சுபீட்சமாக இருக்குமென டட்லிசேனநாயக்காவும் அவரது முதலாளித்துவ சகாக்களும் அளிக்கும் வாக்குறுதிகளையும் வாய் வீச்சுக்களையும் நம்பி மோசம்போகாதபடி எச்சரிக்கையாக விழிப்புடன் இருக்கவேண்டும்.

றொபர்ட்ஓவன் காலத்துக்குப்பின் உலகம் பெரும் மாற்றத்தையடைந்துள்ளது. இப்போது உலகம் முதலாளித்துவ உலகம், சோஷலிச உலகம் என இருபிரிவாயுள்ளது. சோவியத்ருஷ்யா, சீனு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்வியா, பின்லந்து, எஸ்தோனியா, பல்கேரியா, அல்பேனியா, செக்கோஸ்லா வாக்கியா, கிழக்குஜெர்மனி, போலந்து, ருமேனியா, யூகோஸ்லாவியா, கியூபா, அல்ஜீரியா, என்பனவுடன் வடகொரியாவும் வடவியட்நாமும் சோஷலிச உலகத்தில் அடங்கியுள்ளன. இவற்றிடையே மோதல் போலத் தோன்றுவன இவற்றின் பலத்தைக் குறிக்கும். இவை தம்மைப் பாதுகாக்கும் கட்டத்தைக்கடந்து விட்டன. இவை முதலாளித்துவ உலகை எதிர்க்கும் முயற்சியில் தீவிரமாகச் செயல் படுகின்றன.

சோஷலிச நாடுகளின் வெற்றி வேறு அபிவிருத்தியடையும் நாடுகளில் பிரதிபலிக்கின்றது. சோஷலிச நாடுகளின் பலன் நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் காண்கிறோம். அதன் விளைவாய் அபிவிருத்தியடையும் நாடுகளிலும் சோஷலிச சக்தி பெலமடைகிறதைக் காணலாம். முதலாளித்துவ நாடுகளில் மக்களிடையே அதிகரித்துவரும் ஒழுக்கயீனங்கள் அந்நாடுகளில் முதலாளித்துவத்தின் அழிவுக்கு அறிகுறியாகும்.. ஆகவே எங்கள் போராட்டத்தில் நாங்கள் தனித்து நிற்கின்றோம். என்று அஞ்சவேண்டியதில்லை.

ஜேம்ஸ் P. Canon என்னும் புகழ்பெற்ற சோஷலிசவாதி கூறுவதாவது

"அபிவிருத்தியடைவதற்கும் விரிவடைவதற்கும் உள்ள சகல வழிகளும். அடைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க முதலாளித்துவ பொருளாதாரம் ஸ்தம்பித்துள்ளது. இந்த நிலைமையைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லை. இப்பொருளாதார அம்சங்களை நோக்குங்கால் அமெரிக்க முதாளித்துவத்தின் அழிவு நெருங்கிவிட்டது என்பதும் அதன் இடத்தை சோஷலிசம் எடுக்கும் என்பதும் தெளிவாகிறது.

'சோஷலிச அமெரிக்காவின் வெற்றி ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்டு விட்டது மேலும் சோஷலிச சமுதாயம் அமெரிக்கா வெகுகாலத்துக்குப்பின் அடைய இருக்கும் இறுதியான இலட்சியமல்ல. அது இப்போதய சகாப்தத்திலேயே அடையக் இலக்காகும்."

ஆகவே இலங்கையிலும் நாம் சோஷலிச சமுதாயத்தை இச் சகாப்தத்தில் உருவாக்குவதை எமது இலக்காகக் கொள்வோமாக கிறிஸ்தவமதத்து அதிபதி ஹேவிற் ஜோன்சன் கூறுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோஷலிசமாவது ஊண் உடை இல்லம், போக்குவரவுச் சாதனங்கள் தோட்டந்துரவு தளபாடம் ஆகியவற்றை நாம் இன்று பெறுவதிலும் பத்துமடங்கு அதிகமாகப் பெறும் வாய்ப்பை தொண்ணூறு விகிதத்தினருக்குக் கொடுப்பதாகும்."

இதைப்பெறுவதற்கு எத்தகைய போராட்டத்தையும் செய்யத் தகும். இதைப் பெற்றுவிட்டாலோவெனில் வரக்கூடிய சமுதாயத்தை மாபெரும் எழுத்தாளரும் அரசியல் ஞானியுமாகிய H. G. Wells வர்ணிக்கிருர்.


"நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட இந்த உலகில் மனிதன் தனது வாழ்க்கையை வேலைக்கு அடிமைப்படுத்த வேண்டியதில்லை. இயற்கைச் சக்திகளால் உந்தப்படும் இயந்திரங்களாலேயே வேலைகள் யாவும் செய்யப்படும். நாட்டில் இராணுவத்துக்கு அவசியமற்றுவிடும், சுங்க அதிகாரிகள் இருக்கமாட்டார்கள். பொலீசாரும் சிறைக்காவலரும் அற்றுப்போய் அவர்களுக்குப் பதிலாகக் கல்வி புகட்டும் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரிக்கும். சுகாதார முறைகள் விரிவடைவதனுல் வைத்தியசாலைகள் குறையத்தாதிமார், வைத்தியர் ஆகியோர் எண்ணிக்கையும் குறையும், உலகெங்கும் பரந்த நீதியான பொருளாதார முறை, கள்ளர், கபடர், வஞ்சகர், சூதாடிகள், ஒட்டுண்ணிகள் முதலியோரை, சமூகத்தினின்றும் அகற்றிவிடும்.

'இந்தப் புது அமைப்புத் தோன்றும்வரை மனிதகுலத்தின் கதியும் மனிதனின் வாழ்வும் குறிக்கோளற்றதாயும் அபாயங்களுக்கு இலக்கானதாயும், கவலைகளும் ஏக்கங்களும் நிரம்பப் பெற்றதாயும் இருக்கும்."

---

இப்பிரசுரம் திருநெல்வேலியூர், வ. சச்சிதானந்தம் பாரிஸ்ரர் அவர்களால் யாழ்/நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விவேகானந்தருக்கு

# எமது சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்

நல்லூர்த் தொகுதி

## சமசமாஜக் கட்சி அபேட்சகர்



## திருநெல்வேலியூர், வ. சச்சிதானந்தம்

பாரிஸ்ரர் (லின்கன்ஸ்ஈன்), அப்புக்காத்து,

லண்டன் B. Sc. (Hons.) 1st Class


இலங்கை நிர்வாகசேவை முதலாம் வகுப்பிலிருந்து இளைப்பாறியவர்

சிலகாலம் இலங்கை சர்வகலாசாலை விரிவுரையாளர்

சிலகாலம் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரித் தலைவர்

இதே ஆசிரியரால் :

- ❊ சோஷலிசமே சிறுபான்மையினரின் ஒரே விமோசனம்.
- ❊ யார் குற்றவாளி? தமிழ்க் காங்கிரசா, தமிழரசா அல்லது இருவருமா?
- ❊ தமிழரசுப் போர்வை, உள்ளே கபட நாடகம்.
- ⓞ தமிழ் வகுப்பு வாதத்தின் இறுதி மூச்சு
- ○ சோஷலிசப் புரட்சி.



X

வெளிப்புற அட்டைப்பதிப்பு: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org